☆ தனி இதழ் 1 அணு ☆ இலங்கையில் 10 சதம் ☆ 'PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily ☆ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: மாசி 1- திங்கள் (13—2—56) ☆ ☆ வெளியூர்: மாசி 2உ செவ்வாய் (14—2—56) [இதழ் 20

கக்கன்ஜி - நேருஜி மொழி போர்!

உலகத்தில் எத்தனையோ போர்கள் நடைபெறுகின்றன. இந்தியத் துணைக்கண்டத்தில் நடைபெற்றுவரும் மொழி போரதை அவைகளுடன் இணைத்துக்கொள்ள வேண்டும்.

தெற்கில் உள்ள எட்டு கோடி மக்களும் இந்தி கற்கவேண்டும் என்பதை வலியுறுத்தி, அதற்காக இந்திப் பிரசார சபைகள், தென்னிந்தியாவின் ஒவ்வொரு தாலுகாக்களிலும் நிறுவவேண்டும் எனவும், அவைகளுக்கு பெருந்தொகையை இந்திய அரசாங்கம் செலவிடவேண்டும் எனவும், கக்கன்ஜி அமிருதசரசில் அங்கலாய்த்து இருக்கிறார்.

(4-ம் பக்கம் பார்க்க)

'தட்சிணப் பிரதேச' சூழ்ச்சிகளை அம்பலமாக்குகிறார் அண்ணா

'திட்டத்திற்கு காமராசர் தலையசைத்தது ஏன்?'

'நாட்டவர் அனைவரும் ஏமாளிகள் அல்லவே!'

சென்னை கூட்டத்தில் விளக்கம்

"'தட்சிணப் பிரதேசம்' என்ற யோசனை வேறு எவருக்கும் உதயமாகாதபோது ஒரே ஒருவருக்குத்தான் அந்த யோசனை உதித்தது.

"பேராபத்துக்களைச் சிரமப்படாமல் உருவாக்கிவிட்டு அவை பெரும் புயலாக உருவெடுக்கும்போது ஓய்வு பெற்றுக் கொள்ளும் பழக்கமுடைய அன்பர் ஆச்சாரியார்தான் முதன் முதலில் அந்த யோசனையைத் தெரிவித்தார்.

"ஆச்சாரியார் இந்த யோசனையைத் தெரிவித்ததற்கு காரணம் உண்டு; 'தமிழ் நாடு' என்ற மாநிலம் அமைந்தால், ஆச்சாரியார் சுலபத்தில் முதன் மந்திரிப் பதவியில் அமர முடியாது.

"தமிழ் நாடு சட்டசபையில் பார்ப்பனரல்லாதாரே பெருவாரியாக வந்துவிடுகின்றனர்,—அவர்கள் எந்தக் கட்சியினராயிருந்தாலும்! அதனால் காமராசர் போன்றவர்கள், 'தமிழர்' என்ற தகுதி மட்டும் கொண்டு முதன் மந்திரிகளாகிவிட முடிகிறது; எனவே தமிழ் நாடு கேரளம், கன்னடம் என்ற மாநிலங்களை ஒன்றுசேர்க் கொண்ட 'தட்சிண ராஜ்யம்' அமைந்தால், இங்கு சுப்பிரமணியம் (மந்திரி) போன்ற சிலரும், கேரளத்தில் கோவிந்தமேனனும் சிலரும், மைசூரில் அனுமந்தையாவும் சிலரும் தலைவை ஆதரிப்பார்கள்; அப்போது, தான் முதன் மந்திரியாவது சுலபம் — என்று ஆச்சாரியார் கருதுகிறார். தமிழர் மட்டுமே பெருவாரியாகக் கொண்ட தனி சென்னை சட்டசபையில் ஆச்சாரியார் வரமுடியவில்லை—பார்ப்பனத் தலைவர்கள் பதவிக்கு வரமுடியவில்லை என்பதால்தான், ஆச்சாரியார் இப்படி ஒரு யோசனையைத் தெரிவித்திருக்க வேண்டும்.

"தட்சிணப் பிரதேசம் அமைந்த மறுவாரத்தில் ஆச்சாரியார் முதன் மந்திரியாக வரக்கூடும்; இதனால்தான், பார்ப்பன குலத்திலேயே மேதையும், அரசியல் நுணுக்கமறிந்தவரும், அவற்றைக் காங்கிரசாருக்கே கற்றுத்தருபவரும், காலஞ்சென்ற ஆர். கே. சண்முகம் செட்டியாரவர்களால் 'குல்லுகப் பட்டர்' என்றழைக்கப்பட்டவருமான ஆச்சாரியார், இந்தச் சூழ்ச்சியான திட்டத்தை வெளியிட்டபோதே நாம் கூறினோம்—கருத்தறிவித்தோம்—'நாம் கேட்கும் திராவிட நாடு அல்ல, இது; நாம் கேட்கும் திராவிட நாடு உண்பதற்கான இட்லி என்றால், தட்சிணப் பிரதேசம் குழந்தைகள் விளையாடுவதற்காகத் தயாரிக்கும் 'மண் இட்லி'யாகும்' என்று கூறினோம்.

"காமராசரும் அப்போது தெளிவாகப் பேசினார்—'இந்தத் திட்டம் கூடாது' என்று! இப்போது காமராசர், 'நானாகச் சொல்வதற்கில்லை' என்று இங்கு கூறுகிறார்; ஆனால், அங்கு தலையசைத்துவிட்டிருக்கிறார்.

"தட்சிணப் பிரதேசம் அமைந்தால் ஆச்சாரியார் முதன் மந்திரியாக வர முடியுமே தவிர காமராசர் வரமுடியாது; வேண்டுமானால், கக்கனை இராஜினாமாச் செய்யச் சொல்லி, தான், தமிழ் நாடு காங்கிரஸ் தலைவராகலாம்; அதுதானே முடியும்?

"'காமராசர் எப்படி ஒப்புவார் தன் பதவிக்கே ஆபத்து வரக்கூடிய ஒரு திட்டத்திற்கு,' என்று கேட்கக்கூடும் சிலர். காரணங்கள் உண்டு; 'யானை தன்தலையில் மண்ணை வாரிப் போட்டுக்கொண்டது' என்ற பழமொழிபோல, காமராசர் நடந்துகொண்டிருக்கலாம்; அல்லது ஒரிசாவுக்கு பீகாருக்குக் கவர்னராகலாம்; என்—அகில இந்திய காங்கிரசுக்குக் கூடத் தலைவராகலாம்; ஏதாவது ஒரு பதவி நாற்காலி துடைக்கப்பட்டுத் தரப்படும்; முதன் மந்திரி பதவி போனால் என்ன?' என்று, அவருக்கு உறுதிமொழி அளிக்கப்பட்டிருக்கலாம்.

"வேறு ஏதாவது பதவியில் கொலு வீற்றிருக்கலாம்— என்று கூறப்பட்டிருப்பதால், 'இது பற்றி ஏன் கவலைப்பட வேண்டும்?' என்று காமராசர் கருதியிருக்கக் கூடும்; இதைத் தவிர, வேறு மூன்றாவது காரணம் எனக்குப் புலப்படவில்லை.

"ஆச்சாரியாரல்லவா அதிருஷ்டசாலி? வேலை செய்யாமலேயே அவருக்குக் காரியம் கைகூடுகிறது; யோசனை பலனளிக்கிறது முழங்கால் நீரில் இறங்காமல், சேற்றில் நடந்து உழலாமல், தேர்தலில் நின்று அவதிபுருமல் பதவி கைக்குக் கிடைக்கிறது.

"நண்பராகவோ, விரோதியாகவோ, ஆச்சாரியார் இருப்பதையே நான் பெருமையாகக் கருதுகிறேன்.

"மைசூர் முதன் மந்திரி அனுமந்தையா, தட்சிணப் பிரதேசம் அமைவதற்கு இணங்கவில்லை என்று தெரிகிறது.

அமிர்தசரசிலிருந்து திரும்பும் காமராசரும், கோவிந்த மேனனும், 'கேரளமும்—தமிழ் நாடும் இணைந்து 'தட்சிண ராஜ்யம்' அமைக்கப் போகிறோம்' என்று அறிக்கை வெளியிடப் போகிறார்கள்.

"'தேவிகுளம்—பீர்மேடு கேட்டீர்கள்; என் திறமையைப் பார்த்தீர்களா? திருவாங்கூரையும்—கொச்சியையும் கூட உங்களுக்குப் பெற்றுத் தந்திருக்கிறேன்" என்று பேசுவார், இங்கே, காமராசர்!

"அங்கே கோவிந்தமேனன், 'கல்குளம், தோவாளை, அகத்தீசுவரம் போய்விட்டது என்று வருந்தினீர்களே! இதோ பாருங்கள், உங்களுக்கு அவற்றை மட்டுமல்ல—மதுரையையும், மதராசையும் பெற்றுத் தந்திருக்கிறேன்; சென்னை உங்களுக்குத்தான்; அங்குள்ள கடற்கரை உங்களுக்குத்தான்; கடற்கரையிலிருக்கும் சர்க்கார் அலுவலகம் உங்களுக்குத்தான்; அங்குள்ள உத்தியோக நாற்காலி எல்லாம் உங்களுக்குத்தான் தான' என்று பேசுவார்.

"இப்படி இவர்கள் பேசுவதைக் கேட்டு ஏமாறும் அரசியல் ஏமாளிகளாக மக்கள் அனைவரும் இல்லை என்றாலும், சிலரேனும் இருப்பார்களல்லவா? அந்தச் சிலரைக் கூட்டிச் சேர்த்து, 'இவர்கள் எல்லாம் ஆதரிக்கிறார்கள்' என்று கூறி தட்சிணப் பிரதேசத்தை அமுல் செய்ய முற்படுவார்களேயானால், தமிழகத்தில் நாம் நடத்துகிற எதிர்ப்புப் போராட்டங்களைவிட கடுமையான எதிர்ப்புப் போராட்டங்களைக் கேரளத்தில் நடத்துவார்கள்—மக்கள் என்பது நிச்சயம்.

"'தட்சிண ராஜ்யம்' தமிழர்தம் வாழ்வைக் கெடுக்கும்—தமிழ் மொழி வளர்ச்சியைக் குறையச் செய்யும்—தமிழர்தம் அரசியல் பொருளாதார எதிர்காலத்திற்கு உலைவைக்கும்—என்பதால், நாம் அதை எதிர்க்கிறோம்.

"பிப். 20-ந் தேதி வேலைநிறுத்தம், தேவிகுளம்—பீர்மேடு வட்டங்களைப் பெறுவதற்காக மட்டுமல்ல—மூன்று நான்கு காரியத்திற்காக நடைபெறுவதாகும்.

"தட்சிணப் பிரதேசத் திட்டத்தை எதிர்க்க—தேவிகுளம், பீர்மேடு தமிழருக்கு ஆக—சென்னைக்கு 'தமிழ் நாடு' என்று பெயரிட ஆகிய காரியங்களுக்காக பிப். 20-ல் பொதுவேலை நிறுத்தம் ஏற்பாடு செய்யப்படுகிறது; அதனைத் தமிழர்கள் வெற்றிகரமாக நடத்திக்காட்டியாக வேண்டும்,"

—என்று, சென்னை-சேப்பாக்கம் டாக்டர் நடேசனார் நினைவு மன்றச் சார்பில் 8-2-56 அன்று நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பேசுகையில் அண்ணா அவர்கள் குறிப்பிட்டார்.

தொடர்ந்து அண்ணா அவர்கள் பேசியதாவது:—

"டாக்டர் நடேசனாரை அறியாதார், தமிழகத்தின் கடந்த ஒரு தலைமுறையின் அரசியல் வரலாற்றை அறியாதவர்களாவார்கள். சிறந்த ஆற்றலும் அதைவிடச் சிறந்த அன்பு உள்ளமும் கொண்டவர் டாக்டர் நடேசனார்.

"நான் கல்லூரியைவிட்டு வெளி வரும்போது, ஜஸ்டிஸ் கட்சியில் ஈடுபாடுடையவனாயிருந்தேன்; அப்போதெல்லாம் என்னைப் போன்றிருந்த இளைஞர்கள்— தேசிய இயக்கத்தில் ஈடுபாடு கொண்டவர்கள்—என்னைக் கேட்டனர்—'ஜஸ்டிஸ் கட்சி சரிகைத் தலைப்பாகைகள் நிரம்பியதாயிற்றே! சிற்றரசர்களுடையவும், சீமான்களுடையவும் கூடாரமாயிற்றே! நீங்கள் எப்படி அந்தக் கட்சியில் ஈடுபாடு கொள்கிறீர்கள்?' என்று!

"நான் கூறினேன்—'சரிகைத் தலைப்பாகைகள் மட்டுமல்ல; டாக்டர் நடேசனார் போன்றவர்களும் அக்கட்சியில் இருக்கிறார்கள்,' என்று! எனதுழகன்பால் இரக்கமும் அறிவாலும், ஆற்றலாலும் சிறந்த ஒரு உருவம்—திருஉருவமாம் நடேசனாரைத்தான் அப்போது நான் காட்டுவேன்.

"அவரது அன்பு உள்ளத்தினால் ஈர்க்கப்பட்ட [illegible], 'அவரைப் போன்றே ஜஸ்டி[illegible] கட்சி ஆக்கப்படவேண்டும்' எ[illegible] ஆசைப்பட்டேன்.

"அப்படிப்பட்ட பெ[illegible]வரின் பெயரால் இயங்கும் ம[illegible]தின் சார்பில் நடைபெறும் இக் கூட்டத்தில் கலந்துகொள்வதில் பெருமையும், பூரிப்பும் கொள்கிறேன்.

"நாமெல்லாம் இந்த நடேசன் மன்றத்தின் சார்பில, இதே இடத்தில் சில ஆண்டுகளுக்கு முன்பு கூடினோம்—இப்போது போன்று ஒரு நெருக்கடியான நேரத்தில்!

"வடநாட்டு மந்திரிகளுக்கும், தலைவர்களுக்கும் அவர்கள் இங்கே வரும்போது கருப்புக்கொடி காட்டுவதென்று நாம் முடிவு செய்திருந்தோம்; அந்த முடிவின்படி சென்னைக்கு வந்த திவாகர் என்ற வடநாட்டு மந்திரிக்குத் தமிழரின் கொதிப்பை எடுத்துக்காட்ட கருப்புக்கொடி பிடிப்பது பற்றி மக்களுக்கு விளக்குவதற்கு இங்குதான் முதல் போராட்டம் நடத்தினோம். அதன் பிறகு திவாகருக்கு நாமெல்லாம் வெற்றிகரமாக கருப்புக் கொடி பிடித்தோம்.

"அப்போதுபோல் இப்போதும் அதே ஒரு போராட்டச் சூழ்நிலையில் இங்கு கூடியிருக்கிறோம்.

(4-ம் பக்கம் பார்க்க)

★★★-★★★★-★★★★★★★★★★

'ஹர்த்தால்'

(பொது வேலை நிறுத்தம்)

காந்தியார் விளக்கம்

"அரசாங்கத்தின் செயலைக் கடுமையாகக் கண்டிக்க 'ஹர்த்தாலே' சரியான முறையாகும். தேசிய அபிப்பிராயத்தைத் தெரிவிக்க, மாபெரும் பொதுக்கூட்டங்களைவிடச் சக்திவாய்ந்த மார்க்கம் இது."

—1919-ல் 'யங் இந்தியா'வில்

★★★★★★★-★★★★★-★★★★★

அரசியல்வாதியா? தீர்க்கதரிசியா?

பண்டித நேரு எந்த வாதி?

★

ஷகீத் நகர், பிப். 9—

"ஒரு மகாத்மாவை அரசியல்வாதி எவ்வளவுதான் புகழ்ந்தாலும், மகாத்மாவைப்போல் அரசியல்வாதியால் நடந்து கொள்ள முடியாது"

"அரசியல்வாதி மகாத்மாவல்ல; அரசியல்வாதி மகாத்மாக்கள் அல்லது தீர்க்கதரிசிகள்போல் இயங்க முடியாது; அரசியல்வாதி மற்றவர்களின் மூலமாக இயங்கவேண்டும்.

"ஒரு குடி அரசு நாட்டில் அரசியல்வாதி தன்னுடைய கருத்துக்களை மட்டுமல்ல; பெரும்பாலான மற்றவர்களின் கருத்துக்களையும் பிரதிபலிக்க வேண்டும்; இல்லையெனில் அவர் அரசியல் தலைவராக இருக்க முடியாது"

என்று, பண்டித நேரு, காங்கிரஸ் ஆலோசனைக் குழுவில் கூறியுள்ளார்.

பிப். 20—சர்வகட்சி ஹர்த்தால் :

'இஷ்டப்பட்டால் (திராவிட) கழக மெம்பர்களும் பங்கு பெறலாம்'

" இஷ்டப்பட்டால் (திராவிட) கழக மெம்பர்கள் பிப். 20-ந் தேதி சர்வகட்சி ஹர்த்தாலில் கலந்துகொள்ளலாம்."

—இவ்வாறு, 5—2—56 அன்று திருச்சி தேவர் ஹாலில் நடைபெற்ற திராவிடர் கழக மாணவர் மாநாட்டில் பேசுகையில் பெரியார் ஈ. வெ. ரா. குறிப்பிட்டிருக்கிறார். —'தினமணி' : 8-2-56

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 13—2—56 திங்கள்

அசோகர் பெயரால்!

போதை தருவனவற்றுள் அதிகாரத்துக்கு இணையானது எதுவுமே கிடையாது. கட்டுக்கடங்காத அதிகாரம் மட்டற்ற வெறியைத்தான் தரும்.

பேரதிகாரத்தைப் பெற்று, பெரும் வெறியர்களாகத் தலைவிக்கங்கொண்டு தரணியில் தான்தோன்றித்தனமாக நடந்துகொண்டவர்கள் ஏராளம். அத்தகையவர்கள் முடிவு, எதிர்கால சந்ததியினருக்கு ஒரு பெரும் படிப்பினையாகும்.

அவ்வரிய படிப்பினையைக் கற்றுணர்ந்து நடக்கத் தவறிவிட்டிருக்கிறார், இந்தியப் பிரதமர் நேரு. உரோம் நாட்டு அதிபன் [illegible]ர் தோரணையில், மக்களை [illegible]றுத்தமுனைந்திருக்கிறார்.

[illegible] சிதைவு—நெப்போ[illegible]ன் நாசம்-நேரு போன்ற [illegible]லவிக்கங் கொண்டவர்களுக்குத் தக்கதோர் எச்சரிக்கைகளாகும்.

சார்லஸ் மன்னனின் சிரம், மக்களின் கரத்தால் துண்டிக்கப்பட்டது.

ஜேம்ஸ் மன்னன், நாட்டைவிட்டே விரட்டப்பட்டான், மக்களால்.

'நானே ஆண்டவன்—எனது வாக்கே வேதம்—மக்கள் சொல் மதியேன்' என்று லூயி மன்னன் மண்டைவீக்கங்கொண்டு மண்டலத்தை ஆண்டான். அதற்கு விலையாக, தன் பதவியை மட்டுமல்ல—தலையையும் கொடுத்தான்.

தன்னை ஒழித்துக்கட்ட எழுந்த மக்கள் கொந்தளிப்பை, ஜார் மன்னன், அடக்கி ஒழிக்க முயற்சிக்காமலா இருந்தான்? முயன்றான்—முடிவில் மணல்மேடு சரிவதுபோல் சரிந்தும் போனான்.

இட்லர் மட்டும் என்ன? அவன் பெயரைக் கேட்டாலே ஐரோப்பாவே நடுங்கிற்று. தன் சூறாவளிப் படைகொண்டு கண்மூடித் திறக்குமுன் ஒவ்வொரு நாட்டையும், தன் காலடியில் சரணாகதி அடையச் செய்தான். ஆனால் அவன் அழிவை, அவனது சூறாவளிப் படை—நவீன போர்க் கருவிகள் எதனாலும் தடுக்க முடியாமல் போய்விட்டது.

இவ்வளவு வரலாற்றுச் சம்பவங்களையும் கற்றிருப்பவர்தான், இந்தியப் பேரரசின் பிரதமர் நேரு. இருந்தாலும், அவைகளில் மறைந்து கிடக்கும் அரிய படிப்பினையை மட்டும் ஏனோ கற்கத் தவறிவிட்டிருக்கிறார்.

பலாத்காரம் கூடாது என்ற சிறந்த போதனையை முதல் முதலாக அளித்தவர் புத்தர் பெருமான்தான். புத்தர் பிரான், அவ்வுயர்ந்தக் கோட்பாட்டை மக்களுடைமையாக மட்டுமே அளிக்கவில்லை-மண்டலாதிபதிகளுக்கும் உரியபொது நெறியாகத்தான் போதித்தார்.

அசோகன் அதை செயலாற்றினான்—வரலாற்றில் சிறப்புமபெற்றான்.

கலிங்கத்தை வெல்ல போர் தொடுத்தான் அசோகன்; களத்தில் ஓடிய குருதி ஆறு கண்டு அசோகன் பெரும் துயரத்துக்குள் மூழ்கினான்; கழுவாய் தேட முற்பட்டான்.

'நாடு பிடிக்கும் பேராசை கொள்ளேன்; போர் தொடுக்கும் வெறிச் செயலை மேற்கொள்ளேன்' என்று, புத்தர் புனித போதனைக்குத் திரும்பினான்.

போதனையையும்--செயலையும் ஒன்றுபடுத்தினான். இரண்டையும் வெவ்வேறாக, ஒன்றுக்கொன்றுத் தொடர்பில்லாது துண்டித்து நடந்துகொள்ளும் கயமையைக் கருவறுத்தான் அசோகன்.

புத்தரின் போதனை—அசோகரின் போக்கு, 'பலாத்காரம் கூடாது என்பதை, மண்டலாதிபதிகளும் — மக்களும் ஒருங்கே கடைபிடித்து ஒழுக வேண்டிய தனிப்பெரும் பொது நெறியாகக் கொள்ள வேண்டும்' எனக் கட்டளையிடுவதாக உள்ளன.

குறிப்பிட்ட ஒரு முடிவை அடைவதற்கு மேற்கொள்ளப்படும் நடைமுறை—சாதனம் புனிதமானதாக இருந்தால்தான், அம்முடிவும் புனிதமானதாக அமையும் என்பது காந்தியார் போதனையின் சாராம்சமாகும். அதை நேரு அறிந்திருக்கிறார் என்பதைப் பிறர் அறிந்துகொள்ளும் வகையில் அமிர்தசரசில், அவரே அக்கருத்தைச் சுட்டிக்காட்டியும் இருக்கிறார்.

அமிர்தசரசில் அசோகனின் துதிபாடவந்த நேரு—புத்தரின் போதனையைப் புகழ்ந்து கூற வந்த நேரு, அவர்கள் செயலில் காட்டிய செம்மை நெறிகளைத் தம்மால் பின்பற்ற முடியவில்லையே என்பதற்காக வெட்கப்பட்டிருக்கவேண்டும் —வேதனைப்பட்டிருக்க வேண்டும்—துக்கப்பட்டிருக்க வேண்டும்!

இந்தியப் பிரதமர் நேரு, புத்தர் போதனையைப் பாராட்டுகிறாரேயல்லாது, பின்பற்ற விரும்பவில்லை.

அசோகன் காட்டிய வழியை, அவர் பாராட்டத்தான் தயாராக இருக்கிறாரேயல்லாது, அதன்வழி நடக்க அவர் மனமுடையவராகயில்லை!

புத்தர் போதனை என அவர் உதடு ஒலிக்கிறது—அவர் உள்ளமோ, சீசர் வழி இயங்கத் துடிக்கிறது!

அசோகன் வகுத்த பாதை என அவர் நாக்கு பேசுகிறது —அவர் நெஞ்சோ,ஜார் போக்கிலே தலைவிரித்தாடத் தாண்டவம் புரிகிறது.

சீசரின் முடிவும், நெப்போலியன் நாசமும், சார்லசின் அழிவும், ஜேம்சின் சிதைவும், லூயியின் இறுதியும், ஜாரின்வீழ்ச்சியும் பல்லாண்டுகளுக்கு முன் ஏற்பட்ட வரலாற்றுச் சம்பவங்கள். அவைகளின் படிப்பினையை, தாம் ஒரு வரலாற்று ஆசிரியராக இருந்தபோதினுமகூட, பேரதிகாரத்தில் வீற்றிருக்கும் காரணத்தால், இந்தியப் பிரதமர் நேரு மறந்துவிட்டிருக்கக் கூடும்.

'எதிர்ப்போரை அதம் செய்வேன்' என்று எந்த இடத்தில் இருந்துகொண்டு இந்தியப் பிரதமர் நேரு கர்ஜிக்கிறாரோ, அதே அமிர்தசரசில்தான் 1919-ம் ஆண்டில், ஆங்கில ஏகாதிபத்தியம், அதை எதிர்த்த மக்களை —நிராயுதபாணிகளான மக்களை—சுட்டு வீழ்த்திற்று! அப்படுகொலைக்கு ஒருவர் அல்ல, ஒருநூறு அல்ல—இரண்டாயிரம் மக்கள் பலியாயினர்! இரண்டாயிரம் மக்களை பலிகொண்டுமகூட, ஆங்கில ஏகாதிபத்தியத்தால் இந்தியத் துணைக்கண்டத்தில் நிலைத்த ஒரு சக்தியாக இருக்கமுடியவில்லை.

இதிலிருந்து பெற்றிருக்க வேண்டிய அரிய பாடத்தைக்கூட, இந்தியப் பிரதமரால் பெறமுடியவில்லை என்றால், அவர் நிலைகண்டு, எவர்தான் எள்ளிநகையாடாமல் இருப்பர்? பரிதாபத்துக்குரியவர்!

விடுதலை ஆர்வம்—அதை வெறி என்று மாற்றார் பழித்தாலும்—பெற்றுவிட்ட மக்கள், அதிகார வெறியர்களின் அடக்குமுறைகளுக்கு ஆளாவதுபற்றி அஞ்சமாட்டார்கள். விடுபடும் வரையில் ஆதிக்கக்காரர்களை எதிர்ப்பர்—எதிர்ப்பில் மரணம் கிட்டுமாயின் மகிழ்வுடன் ஏற்பர்—வெற்றி பெறும் வரை போரிட்டே தீருவர். மக்களின் விடுதலைப் போர், இம்மகத்தான உண்மையின் உறைவிடமாகும்.

அசோகர் ஆற்றிய பணி குறித்து, விளக்கம் தருவதற்காக ஒரு பிரதமர் தேவை இல்லை—அதற்காக வரலாற்றுப் பேராசிரியர்கள் ஏராளமானவர் உள்ளனர். அதை நடைமுறையில் காட்டத்தான் ஒரு நாடாளும் நல்லவர் வேண்டும். மக்களின் நம்பிக்கையைப் பெற்று நாடாள வந்த நல்லவரோ, 'ஜார் தெரியுமா—சீசர் அறிவீரா—அவர்களை எண்ணிப் பார்!' என்று நாட்டு மக்களை அறைகூவி அழைப்பதுபோல், கொக்கரிக்கிறார். அதையும், அசோக சக்கரம் பொறித்தக் கொடியின் கீழிருந்துகொண்டு செய்கிறார்!

ஒடயர் சுட்டான்—தோட்டாக்கள் கைவசமிருந்த வரையில் சுட்டான்—நிராயுதபாணிகளாகக் கூடி இருந்த மக்கள் ஜாலியன் வாலாபாக்கில் பிணமாயினர்! இன்று ஒடயர் இல்லை—அவன் கட்டிக்காக்க விரும்பிய ஆங்கில ஏகாதிபத்தியம் இல்லை.

நாமும், அசோக நெறி உபதேசியாரின் உயிர் போக்கும் கருவிகளுக்கு அறப்போர்வீரர்களாகப் பலியாவோம், நமது கோரிக்கை நியாயமானது என உலகம் உணர—நமது சந்ததியினர் விடுபட்டு நல்வாழ்வு பெற, நாம் இத்தியாகத்தைச் செய்யத்தான் வேண்டும்.

புத்தர் நெறி வாழ்க! அசோகர் காட்டிய அறநெறி வளர்ந்தோங்குக!

'வெறி'களுக்குக் கணக்கெடுக்கிறார்கள்!

"வாசகர்கள் எல்லோரும் தயவுசெய்து அமிர்தசரஸ் பக்கம் திரும்ப வேண்டும். உலகத்தில் எவ்வளவு 'வெறி'கள் இருக்கின்றன என்பதற்கு அங்கு புள்ளிவிவரம் தயாரித்துக்கொண்டிருக்கிறார்கள்.

"மொழி வெறி, பிரதேச வெறி, ஜாதி வெறி, காட்டுமிராண்டிப்போக்கு வெறி, —இப்படியாக உள்ள 'வெறி' இல்லாத 'வெறி' எல்லாவற்றையும் கண்டித்துத் தீர்மானம் போட்டிருக்கிறார்கள். இந்த ஜாபிதாவில் ஏனோ, குடி வெறியும், பதவி வெறியும் காணப்படவில்லை!

"இப்போது அங்கு கடுங்குளிர் காலம் சார்...." என்று என் ஆபீஸ் பையன் வேறு எதையோ சூசகமாகக் குறிப்பிடுகிறான்.

"எது எப்படியிருந்தபோதிலும், முன்கூட்டியே 'வெறிக்கடி மருந்து' தயாரிப்பாளர்கள், அமிர்தசரஸ் நோக்கி திக்விஜயம் செய்திருந்தால், விற்பனையும் நன்றாக இருந்திருக்கும். 'வெறி' எந்த ரூபத்திலிருந்தாலும், அது மிகவும் கெடுதலானது.

"புற்று நோயில் இரண்டு வகை உண்டு; ஒன்று, உடலின் வெளிப் பாகத்தில் தோன்றுவது; மற்றது, உள்ளேயே புரையோடிப்போவது!

"வெளிப்படையாக வெறியை வெளிக்காட்டுபவர்களிடம் ஆபத்து குறைவு. 'இந்த மனிதனிடம் இன்ன 'வெறி' இருக்கிறது; இத்தகைய போக்கையுடையவன் என்பது, மற்றவர்களுக்குத் தெளிவாகத் தெரியும்; ஆனால், 'வெறி'யை வெளிக்காட்டாமல், உள்ளே அடக்கிக் கொண்டிருப்பவர்கள்தான் ஆபத்தானவர்கள்.

"உள்ளத்திலே பதவி வெறி; சகலவற்றிலும் 'தான்' என்ற மமதை வெறி; ஆனால், உதட்டிலே, 'ஜனநாயகம்', 'மக்கள் உரிமை' போன்ற அரசியல் பஜனை; இதுபோன்ற 'பஜனைக் குல்லாய்'களை எத்தகைய மனிதர்கள், அடுத்தபடி யாருக்குப் போடுவார்கள் என்பதை நிச்சயமாகச் சொல்ல முடியாது!

"மொழி வெறி, ஜாதி வெறி, நிற வெறி — இவையெல்லாம் உள்ளன என்டதை யாரும் மறுக்கவில்லை.

"இந்த 'வெறி'களில் அகப்பட்டு, தலைவெட்டி நாகர்களை விட மக்கள் மோசமாக நடப்பதாக நேருஜி வருந்துகிறார்.

"மொழி வெறி, பிரதேச வெறிக்கு ஆரம்பத்தில் தூபம் போட்டவர்கள் யார்? இந்த விவகாரத்தின் ஊற்று, உத்தரப் பிரதேசத்தில்தான் இருக்கிறது!

"தமிழ்நாட்டில் வெறி என்பது மருந்துக்குக்கூடக் கிடையாது. அரசியல் போதையில், என்றுமே மதுவிலக்குக் கொள்கையைக் கடைப்பிடிப்பவர்கள்; வடலூரார் வகுத்த அன்பு வழியில் செல்லும் சாதுக் கூட்டத்தை இங்கேதான் காணலாம். 'சித்தன் போக்கு சிவன் போக்கு........' என்ற மனநிறைவு கொண்டவர்கள். இத்தகைய மக்கள் கூட, மொழி விவகாரத்தில் விழிப்பான நிலையில் இருந்தால், அதற்கு ஆபத்து எங்கிருந்தோ வருகிறது என்றுதான் அர்த்தம!

"திடீரென்று ஒருநாள் 'தபால் கார்டை'ப் பார்த்தார்கள்; எல்லாம இந்தி மயமாகக் காணப்படுகிறது. இரு பக்கமும பசை ஒட்டும் ஒன்றரையணா கவரை எப்பக்கம் திருப்பினாலும் இந்தி எழுத்துக்கள்....! அவர் மட்டுமல்ல; தெற்கிலே சில ஆசாமிகளும் இப்படித்தான் — தமிழ்ப் பசையிலும் ஒட்டிக்கொள்கிறார்கள்; இந்தி பசையிலும் ஒட்டிக்கொள்கிறார்கள்!!

"இரயில்வேக்களின் ஜெனரல் மானேஜர்கள் மகாநாடு புதுடில்லியில் நடைபெற்றது. இங்கு என்ன ஆலோசனை செய்தார்கள்?

"பிரயாணிகளுக்கு மேற்கொண்டு என்ன வசதிகள் செய்யலாம? இரயில்களைக் குறித்த காலத்தில் ஓட்ட வழி என்ன? பெரம்பூர் தொழிற்சாலையில் உற்பத்தி தொடங்கியும் ஓட்டை உடைச்சல் பெட்டிகள் இன்னும் ஏன் ஓடிக்கொண்டிருக்கின்றன? ரயில்வே கட்டணங்களை அதிகரித்துக்கொண்டே போகிறார்கள்—அதற்கேற்றபடி வசதிகள் உள்ளனவா?-இதுபோன்ற அம்சங்களை இம்மாநாட்டில் விவாதித்து விமோசனத்திற்கு வழிவகை செய்திருந்தால் பொருத்தமாக இருந்திருக்கும; ஆனால், இவர்கள் எதைப் பற்றி ஆலோசனை நடத்தினார்கள்?

"இந்தி மொழியை நடைமுறையில் கொண்டு வந்திருப்பதால் ஏற்பட்டுள்ள பலாபலன்கள் என்ன? 'இதை மேலும் எப்படி விஸ்தரிக்கலாம்?'—இதுதான் இவர்கள் நடத்திய ஆலோசனை—என்கிறார்கள்!

"இதற்கு இப்போது என்ன அவசரம் வந்தது? 'இந்தியார் மீதும் திணிக்கப்படமாட்டாது,' என்று நேருஜி அடிக்கடி கூறுகிறார். 'எப்படி எப்படியெல்லாம் திணிக்கலாம்,' என்று நிர்வாகத்தில் நாளுக்கு நாள் நடவடிக்கை எடுத்து வருகிறார்கள்; இது எந்த 'வெறி'யில் சேர்ந்தது என்பதுதான் புரியவில்லை?

"மொழி வெறி கூடாது—என்று மற்றவர்களுக்கு உபதேசம் செய்யும் நேருஜி' முதலில், உத்தரப் பிரதேச இந்தி வெறியர்களுக்கு உபதேசம் செய்ய வேண்டும். இந்த வெறியர்கள் உத்தரப் பிரதேசத்தில் மட்டுமல்ல—நேருஜியைச் சுற்றிலும் டில்லியிலேயே இருக்கிறார்கள். இவர்கள் திருந்தினால், மற்ற இடங்களிலும், 'வெறி' தானாக மறைந்துவிடும். அதைப் புரிந்துகொள்ளாமல், 'தலை வெட்டி காட்டுமிராண்டிகளைவிட மோசமானவர்கள்........' என்று சொல்லுவதால் பலன் எதுவும் ஏற்படப் போவதில்லை!"

—இவ்வாறு, 10—2—56 'நவ இந்தியா' இதழில், 'ஊர் வம்பு' என்ற பகுதியில், 'ஊ. ஆர்.' என்பார் எழுதியிருக்கிறார்.

‘ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறுதானே பதம்?’

காமராசருக்கு அண்ணா பதில்

5—2—56 அன்று, சென்னை—மண்ணடியில் தி. மு கழகச் சார்பில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில், அண்ணா அவர்கள் ஆற்றிய பேருரையின் எஞ்சிய பகுதி இங்கு தரப்படுகிறது :—

“நாம் இப்படி தேவிகுளம்—பீர்மேடு பற்றிப் பேசிக்கொண்டிருக்கும்போது, மற்றுமொரு புதுக்கரடியை—தட்சிணப் பிரதேசத் திட்டத்தைக் கொண்டுவந்து விட்டிருக்கிறார்கள்; காமராசர், இன்னும் அதுபற்றித் தெளிவாகப் பேசக் காணோம் நான் அவருக்குச் சொல்ல விரும்புகிறேன் — ‘உள்ளொன்று வைத்துப் புறம் ஒன்று பேசவேண்டாம்’ என்று! உள்ளத்தில் உள்ளதை உடைத்துப் பேசட்டும் அவர்! தைரியம் இருந்தால், ‘தட்சிணப் பிரதேசம் நல்ல திட்டம்’ என்று பேசட்டும்! ‘தீது’ என்று பட்டால், நெறித்த புருவத்தோடு நேரு பண்டிதரைப் பார்த்துச் சொல்லட்டும்.

“மந்திரி சபை நல்லதோர் முடிவெடுக்கவேண்டிய கட்டம் இது தான் என்றும் கூற விரும்புகிறேன்.

“தட்சிணப் பிரதேசத் திட்டத்தைக் காமராசர் கொண்டுவருவாரானல், பெரியாருடைய பாசம்—ஆதரவு அவருக்கு எப்படிக் கிடைக்க முடியும்?

“தட்சிணப் பிரதேசத்தை எதிர்த்துக் கடுமையான போர்த் திட்டம் தயாராவதாக பெரியார் அவர்கள் கூறியிருக்கிறார்கள்; அப்படியானல், காமராசருக்கு அவரது நட்பு தொடர்ந்து எப்படிக் கிடைக்கமுடியும்?

“பெரியார் அவர்கள், தட்சிணப் பிரதேசத் திட்டம் அமுலுக்குவந்து அதை எதிர்த்துப் போராட்டம் துவங்கினல், அவருடன் கூட்டாகச் சேர்ந்து போர்ராட்டத்தில் ஈடுபடும் தி மு. கழகம்

“ஜன 27-ந் தேதி சர்வகட்சிக் கூட்டத்தில் கலந்துகொண்ட போது, ‘தட்சிணப் பிரதேசத் திட்டத்தை எதிர்த்துப் பெரியார் ஒரு கூட்டணி அமைத்தால். அதில் தி. மு. கழகம் ஈடுபடும்’ என்று கூறிவிட்டுத்தான் இந்தக் கூட்டணியில் சேர்ந்திருக்கிறோம்

“பெரியார் அவர்கள் நம்மை நீக்கிவிட்டு கூட்டணி அமைத்துவிட முடியாது. அப்படியே செய்தாலும் அவரது போராட்டத்தை ஆதரித்து நாம் வேலை செய்வோம்; ‘பெரியார் கடை அடைக்கச் சொல்லுகிறார்—அடையுங்கள், அடையுங்கள்—இதோ, பெரியார் படை வருகிறது—வழிவிடு, வழிவிடு’ என்போம்; நாம் இதைச் செய்வதைக்கூடவா, பெரியார் தடுத்துவிட முடியும்? எனவே, தட்சிணப் பிரதேசத் திட்டத்திற்கு எதிராக பெரியார் கூட்டுச் சேர்த்தால் அதிலும் கலந்து கொள்வோம் — அழைத்தால்!

“‘சந்தனம் மணக்கிறது’—என்று சங்கராச்சாரியார் சொன்னல், அவருடன் சேர்ந்து, ‘சந்தனம் மணக்கிறது’ என்று கூறுவதில் என்ன தவறு? சங்கராச்சாரியார் கூறுவதினலேயே, சந்தனம் மணக்காமல் துர்நாற்றமடிக்குமா, என்ன?

“சிவன் கோயில் தர்மகர்த்தாவாக இருப்பவர், விபூதி போடுபவர்களை எல்லாம் ‘வேண்டாம்’ என்று சொல்லிவிட முடியுமா? யார் வேண்டுமானலும் விபூதி போடுவார்கள்; அதுபோல, பெரியார் வேண்டுமானல் சிவன் கோயில் தர்மகர்த்தாவாக இருக்கட்டும்—தட்சிணப் பிரதேசத் திட்டத்தை எதிர்ப்பதற்கு! விபூதி போடுபவர்களாக நாம் இருந்து கொள்ளலாம்!

“மற்றமொன்று; சென்னைக்கு ‘தமிழ் நாடு’ என்று பெயர் வைக்க வேண்டும்—என்று எல்லாக் கட்சியினரும் கோருகின்றனர்; அதை ஆட்சியாளர் கவனித்தாக வேண்டும்.

“டால்மியாபுரம் என்ற ஊருக்கு, ‘கல்லக்குடி’ என்ற அதன் பழைய பெயரை வைக்க வேண்டும் என்பதற்காக நாம் ஒரு போராட்டமே நடத்தினேம்; அப்போது அந்தப் பிரச்சினை, பலருக்கு மிகவும் சிறியதாக—தேவை இல்லாததாகத் தென்பட்டது; இப்போது, எல்லாக் கட்சியினரும், சென்னைக்கு ‘தமிழ் நாடு’ என்ற பெயர் வைக்க வேண்டும் என்று கோருகின்றனர்.

“காமராசர் சொல்கிறார்—‘என் கூட்டணி? என்னிடம் வந்து சொல்வதுதானே?’ என்று!

“ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறுதானே பதம்? பதம் பார்த்தாகிவிட்டது; காமராசரை!

“மாமியாருக்கும் — மருமகளுக்கும் சண்டை; பிச்சைக்காரன் அந்த வீட்டில் வந்து பிச்சை கேட்டபோது, மருமகள், ‘இல்லை போ’ என்று சொன்னளாம், வெளியிலிருந்த மாமியார், வீட்டை விட்டு அகன்றுகொண்டிருந்த பிச்சைக்காரனை அழைத்து, விஷயத்தைக் கேட்டறிந்துகொண்டு, ‘நீ வாடா, வீட்டுக்குள்,’ என்று கூப்பிட்டு, ‘அவள் என்ன இந்த வீட்டிற்கு அதிகாரியா, உன்னை வெளியே போகச் சொல்ல’ என்றுகூறி, ‘கேளு பிச்சை’ என்றாளாம்; உடனே பிச்சைக்காரனும், ‘அம்மா தாயே!’ என்றானும்; உடனே மாமியார், ‘அதெல்லாம் இல்லை; போ,’—என்று அடித்துத் துரத்தினளாம்; அதுபோல, காமராசரிடம் போய்க்கேட்டால், காமராசர் கூறுகிறார்—‘தேவிகுளம், பீர்மேடா? என்னிடம் கேட்கட்டும்,’—என்று! கேட்டால் என்ன சொல்லுவார்? ‘அதெல்லாம் இல்லை; போ,’—என்று தானே கூறுவார்?

“அவரிடம் சொல்லிப் பயன் இல்லை என்பதால்தான், ஊர் மக்களிடத்தில் சொல்லுகிறோம்.

“எனவே, காமராசருக்கும்—நமக்கும் பேச்சு இல்லை; பகையும் இல்லை; இருக்கிற தொடர்பெல்லாம், நாம் வரி செலுத்துகிறோம்—அவர் வரி வாங்குகிறார்; அவ்வளவே! எனவே, ஊர் மக்களிடத்தில் உண்மைகளைச் சொல்லுவோம்; ஊமை பேசுகிற வரை — செவிடன் காது கேட்கிற வரை—குருடன் கண் பெறுகிற வரை—கோழை வீரனகிற வரை, ஊர் மக்களிடம் சொல்லுவோம்.

“ஒன்றுபடுவோர் அனைவரையும் ஒன்று திரட்டுவோம்! அணி வகுப்போம்! போர்த் திட்டங்கள் தீட்டுவோம்! போராட்டங்கள் நடைபெற்றவண்ணமிருக்கும்! அது, தேவிகுளம்—பீர்மேடு பெறுவதோடு நிற்காது! தேவிகுளம்—பீர்மேடு என்கிற அளவில் ஆரம்பித்து, வடநாட்டுத் தருக்காட்சி தமிழகத்திலிருந்து தொலைகிற வரையில், நமது கொள்கைக்கு நமது மாற்றுக் கட்சி நண்பர்கள் வருகிற வரையில், அல்லது மாற்றுக் கட்சி நண்பர்களின் கொள்கைக்கு நமது கொள்கைகள் இணங்குகிற வரையில் தொடர்ந்து இந்த அணி திரட்டலும், போராட்டங்களும் நடைபெற்றுக்கொண்டேயிருக்கும்!

“நாட்டில் பல கட்சியினரும் ஒன்றாகி, தமிழர்தம் உரிமைகளுக்காகப் போராட முன்வந்திருக்கும் இந்நேரத்தில், பழைய பகையை வளர்ப்பதுபோல திராவிடர் கழகத் தோழர்கள் பேசியும், எழுதியும் வருகிறார்கள்; திராவிட கழகத் தோழர்கள் “பெரியார் அவர்கள் இந்தக் கூட்டில்இல்லை’ என்பதினலேயே பகை வளர்க்க முற்படுவார்களானல், நான் கூறவிரும்புகிறேன்—‘மொழிவழி அரசு சம்பந்தமாக திராவிடர் கழகக் கருத்துக்களில் எத்தனை முரண்பாடுகள் மூண்டு வருகின்றன’ என்பதை நான் ஆராய வேண்டியவனுவேன்; அந்த நிலைக்கு என்னைத் துரத்தாதீர்கள்!

“என்மீது ஏதேனும் பகை, வெறுப்பு இருந்தால், தனியாக வருகிறேன்-அடித்துப் போடு! தைரியமிருந்தால் தி. மு. கழகத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் தனியாக இரவில் அகப்பட்டால் அவர்களைத் தாக்கு; அடி—முடியுமானல்! அதைவிட்டு, நாட்டில் ஏற்பட்டுள்ள பாசத்தைக் குலைக்கவோ, ஒற்றுமையை மாய்க்கவோ வேண்டாம் என்று திராவிட கழகத் தோழர்களுக்குக் கூறுவேன்.”

சின்னதுரை—மதியழகன் சந்திப்பு

கோவை பிப். 6—

இன்று பிற்பகல் 1 மணிக்கு சிங்காநல்லூரில், பிரஜா-சோஷலிஸ்ட் கட்சித் தலைவரும் கோவை பஞ்சாலைத் தொழிலாளர் சங்கக் காரியதரிசியும், சர்வகட்சிக் கூட்டணியில் அங்கம் வகிப்பவருமான தோழர் பி. எஸ். சின்னதுரை அவர்களை தோழர் கே. ஏ. மதியழகன் சந்தித்து, பிப்ரவரி 20-ல் பொது வேலைநிறுத்தம் சம்பந்தமாகக் கலந்து பேசினர்.

தோழர் சின்னதுரை அவர்கள், வேலை நிறுத்தம் சம்பந்தமாய் ஆலைத் தொழிலாளர்களிடையும், கோவை நகரத்திலும் செய்யப்பட இருக்கிற ஏற்பாடுகளைத் தோழர் மதியழகனிடம் எடுத்துக் கூறினர்

இந்தச் சந்திப்பில், சர்வகட்சிக் கூட்டணி செயற்குழுவின் செயலாளர்களில் ஒருவரும, பிரஜா—சோஷலிஸ்ட் தலைவருமாகிய தோழர் ஏ. சுப்பிரமணியமும, கோவை பஞ்சாலைத் தொழிலாளர் சங்கத் துணைத் தலைவருமான தோழர் வேலுச்சாமியும் கலந்து கொண்டனர்.

உடுமலையில் தி. மு. க. ஊழியர் கூட்டம்

உடுமலை, பிப். 8—

இன்று மாலை 6 மணி முதல் 8 மணிவரை உடுமலைப்பேட்டை நகர திராவிட முன்னேற்றக் கழக அலுவலகத்தில், உடுமலை தி மு க. ஆலைத் தொழிலாளர்கள், மாணவர்கள் ஆகியோரடங்கிய பிப்ரவரி 20—பொது வேலைநிறுத்த ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்தில், நகர தி மு. க செயற்குழுவினர், வெஞ்சமடை தி மு க, உடுமலை தி மு க, மாணவர் கிளை பொறுப்பாளர்கள், வெங்கடேசா ஆலை, பிரிமியர் ஆலை, பழனியாண்டவர் ஆலை, திருமூர்த்தி ஆலை ஆகியவைகளின் பிரதிநிதிகள் 60 பேர் கலந்து கொண்டனர்.

பிரதிநிதிகள் அனைவரையும் தோழர் ப. நாராயணன் வரவேற்றார்.

தோழர் கே ஏ மதியழகன், பிப்ரவரி20—பொதுவேலைநிறுத்த நடவடிக்கை குறித்து விளக்கமாக எடுத்துச் சொன்னர்.

நகரச் செயலாளர் தோழர் காளியப்பன் நன்றியுரையுடன் கூட்டம் முடிந்தது.

திரு-கொச்சி தமிழகத்தில் சர்வ கட்சிக் குழு

பிப். 20-பொது வேலைநிறுத்தத்திற்கு ஏற்பாடு

7—2—56 இரவு 9 மணிக்கு வடசேரி மறுமலர்ச்சி மன்றத்தில தமிழரசுக் கழகத் தோழர் பி எஸ் மணி தலைமையில் திரு-கொச்சித் தமிழக சர்வகட்சிக் குழு அமைக்கப்பட்டு, பிப்ரவரி 20-ம் நாள் திரு-கொச்சித் தமிழகத்தில் பொது வேலை நிறுத்தமும், ஊர்வலமும அமைதியான முறையில், அணுவளவும் பலாத்காரமின்றி நடத்த வேண்டுமென்று ஒரே மனதாய் முடிவு செய்யப்பட்டது.

கூட்டத்திற்குத் தி மு. கழகம் தமிழரசுக் கழகம், கம்யூனிஸ்டுக் கட்சி, தொழிற் சங்கங்கள், கலைக் கழகங்கள், வர்த்தக சங்கங்கள், பொது வாசக நிலையங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகள் வந்திருந்து தங்களது கருத்துரைகளை வழங்கினர்.

நீண்டநேர விவாதத்தின்பின், மேற்படி அமைப்பை நடத்திச் செல்லுவதற்கு தோழர்கள் பி.எஸ். மணி வி எம். ஜான், சி. சங்கர், ஏ. சி எஸ் பிள்ளை, ஆர் சோமசுந்தரம், எம். இராசகோபால், பி கணேசன், பி. இராமச்சந்திரன், ஏ இராமசுவாமி எஸ் இராமச்சந்திரன், எஸ் வைத்தியநாதன், எம். சொக்கலிங்கம், எஸ் கிருஷ்ணப்பிள்ளை, ஜனர்த்தனம். ஏ. செல்லப்பன், கே. எல். எஸ் சந்தானம் ஆகியோர் கொண்ட சகலகட்சிக்குழு அமைக்கப்பட்டது.

மேலும் உறுப்பினர்களைச் சேர்த்துக்கொள்ள அதிகாரம் அளிக்கப்பட்டது.

மேற்கண்டவர்களிலிருந்து நிர்வாகக் குழுவிற்கு கீழ்க்கண்ட தோழர்கள் ஒரேமனதாகத் தெரிந்தெடுக்கப்பட்டனர்

பொதுச்செயலாளர்: வி எம் ஜான்; கூட்டுச் செயலாளர்கள் : பி எஸ் மணி, சி சங்கர்.

திரு-கொச்சித் தமிழக சர்வ கட்சியின் ஆக்க வேலைகளுக்காகத் தேவைப்படும் நிதி வசூல் செய்வதற்குக் கீழ்க்கண்ட தோழர்கள் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர் :—

ஏ சி. எஸ். பிள்ளை —(கன்வீனர்-பொருளாளர்); டி. வி சுப்பிரமணிய(ஐயர்), ஏ இராமசுவாமி எஸ் கிருஷ்ண(பிள்ளை)ன், சி சங்கர், பி எஸ் மணி, வி எம் ஜான், எம் பகவதி.

பின்னர், பிரச்சினையை ஒட்டி பல தீர்மானங்கள் நிறைவேறின.

நேரு சர்க்கார் இழைத்திடும் அநீதி சுவரொட்டி

தமிழகத்துக்கு நேரு சர்க்கார் இழைத்திடும் அநீதியை விளக்கிக் காட்டிடும் மூவண்ணச் சுவரொட்டிகள் “ஆசிய ஜோதி அளித்திடும் நீதி” என்ற தலைப்பில் தி. மு. கழகத் தலைமை நிலையத்தால் அச்சிடப்பெற்று, ஆங்காங்குள்ள தி. மு. கழகக் கிளைகளுக்கு அனுப்பிவைக்கப் பட்டிருக்கின்றன.

சுவரொட்டிகளைப் பாழாக்காமல் அட்டைகளில் ஒட்டிப் பாதுகாப்பான இடங்களில் வைக்கும்படி கிளைக் கழகங்கள் கேட்டுக்கொள்ளப் படுகின்றன.

—தி மு. க. தலைமை நிலையம்

வ. உ. சி. தமிழ் வாலிபர் சங்கம்

3—2—56-ல், சென்னை—அங்கப்பநாய்க்கன் தெரு வ. உ. சி. தமிழ் வாலிபர் சங்கச் சார்பில் நடைபெற்றப் பொதுக்கூட்டத்தில் தட்சிணப் பிரதேசத் திட்டத்தைக் கண்டித்தும், பிற மாநிலங்களிலுள்ள தமிழ்ப் பகுதிகளை தாய்த் தமிழகத்துடன் இணைக்கக் கேட்டுக்கொண்டும் மற்றும் சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு முதலமைச்சர் காமராசருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

கடையநல்லூர் தமிழர் முன்னேற்ற சங்கம்

14—1—56 காலை 9 மணிக்கு கடையநல்லூர் புதுக்குடி தமிழக முன்னேற்ற சங்கத் திறப்பு விழா, பி. ஆறுமுகம் தலைமையில் நடைபெற்றது. தோழர் மு. ஆறுமுகம் சங்கக் கட்டிடத்தைத் திறந்து வைத்தார். தோழர்கள் எஸ். எஸ். சாகுல்அமீது, சு. வேலு, உ. வேலுச்சாமி, ப. புகழேந்தி ஆகியோர் சங்க அவசியம் குறித்துப் பேசினர்.

சேலம் மாவட்ட தி.மு. கழக பிரதிநி[illegible]க்கு

சேலம் மாவட்ட தி. மு. [illegible]க் கூட்டம் 15—2—56 [illegible] 3 மணிக்கு, சேலம் ம[illegible] பாங்க் சத்திரத்தில் நடைபெறும். மாவட்டப் பிரதிநிதிகள் எல்லோரும் கலந்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

ஆசிரியர்களுக்கு உபகாரச் சம்பளம்

திட்டம் குறித்து கல்வித் துறை தலைமை அதிகாரி

காரைக்குடி—

“பள்ளி ஆசிரியர்களுக்கு ஓய்வு கால உபகாரச் சம்பளம் (பென்ஷன்) தரும் திட்டம் குறித்து ஆசிரியர் மனதில் ஒருவகைக் குழப்பம் நிலவுவதாகத் தெரிகிறது.

“இந்தத் திட்டம் வரும் 1956-ஏப்ரல் முதல் அமுலுக்குவரும்; இது துவக்கப் பள்ளிகளிலும், செகண்டரி பள்ளிகளிலும் இப்போது பணியாற்றும், ‘லோயர் கிரேடு’, ‘ஹையர் கிரேடு’, ‘செகண்டரி கிரேடு’ ஆசிரியர்களுக்கு உரியதாகும்.

“எல். டி., பி. டி., மற்றும் உடற்பயிற்சி ஆசிரியர்களுக்கு இது உரியதல்ல,”

என்று, சென்னை கல்வித் துறைத் தலைவர் என். டி. சுந்தரவடிவேலு அவர்கள், தமக்கு காரைக்குடி வட்டார ஆசிரியர்கள் அளித்த வரவேற்பிற்குப் பதில் அளிக்கையில் விளக்கம் தந்திருக்கிறார்.

• • •

அடுத்த மாதம் அமுல்?

திருநெல்வேலி—

“சட்டசபையில் வெளியிடப்பட்ட அடிப்படையில், ஆசிரியர்களுக்குப் ‘பிராவிடண்டு நிதி—பென்ஷன்’ திட்டத்தை அமுலுக்குக் கொண்டுவருவதற்கான உத்தரவை சர்க்கார் அடுத்த மாதம் பிறப்பிக்கும்,” என்று, கல்வி ‘டைரெக்டர்’ என். டி. சுந்தரவடிவேலு தெரிவித்துள்ளார்.

சூழ்ச்சியை அம்பலப்படுத்துகிறார் அண்ணா

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

"இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ளுகிற நாங்களும், உங்கள் மூலமாக நடவடிக்கைகளை அறிந்து கொள்ளவிருக்கும் இன்னும் பல்லாயிரக் கணக்கானவர்களும் இங்கு பெறும் உணர்ச்சியை, ஆர்வத்தை பிப். 20—பொதுவேலை நிறுத்தத்தை வெற்றியாக்கப் பயன்படுத்தவேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

"அன்று எப்படி வெற்றி பெற்றோமோ, அதுபோல, இப்போதும் வெற்றி பெறப்பட்டுபடவேண்டும்.

"இப்போது பிரச்சினை — பொதுவேலை நிறுத்தத்திற்கான பிரச்சினை என்ன என்பது மக்களுக்கு ஓரளவு புரிந்துள்ளது.

"தமிழ் நாட்டிற்குரிய சிலசிலப் பகுதிகள் தமிழகத்திற்குத் தரப்படவில்லை என்று மக்கள் உணர்ந்திருக்கிறார்கள்; 'மக்கள் குரலை மதிக்காத சர்க்கார் நடைபெறுகிறது' என்பதை உணர்ந்திருக்கிறார்கள்.

"தமிழர்களுக்குரிய தேவிகுளம்—பீர்மேடு பகுதிகள் தமிழர்களுக்கு உரியன என்பதால், அவற்றைத் தமிழகத்துடன் இணைக்கச் சொல்லுகிறோம்.

"இப்படிச் சொல்லுவது நாம் மட்டுமல்ல; கம்யூனிஸ்டுகள், பி சோ. கட்சியினர், சோஷலிஸ்டுகள், எல்லாம் கேட்கின்றனர்; காங்கிரசாரும் கேட்கின்றனர்; ஆனாலும், மேலிடம் மறுத்துவிட்டது.

"அண்ணாதுரை மட்டும் கேட்டால், 'ஆசியாவின் ஜோதி நேரு! அண்ணாதுரை அப்படியல்ல! ஆகவே, அண்ணாதுரை சொல்வதை நேரு கேட்பாரா?'—என்று வாதி...ம் காங்கிரசார்; நியாய மா... வாதமல்ல அது, என்று ... அந்த அநியாயம் இந்த ...டு அரசியலில் அனுமதிக்கப்படுகிறது.

"ஆனால் இப்போது, அண்ணாதுரையுடன் சேர்ந்து அந்தோணியும் கேட்கிறார்; சிவஞானமும்—ஜீவானந்தமும் கேட்கிறார்கள்!

"இவ்வளவுபேர் கேட்டும், 'தேவிகுளம்-பீர்மேடு தமிழருக்கல்ல' என்று தீர்ப்பு வழங்குவது, ஆணவத்தின் அறிகுறி என்றுதான் கூறவேண்டும்.

"நாட்டில் உள்ள எதிர்க்கட்சியினர் மட்டுமல்ல—காங்கிரசார் கேட்டனர்; சட்ட சபை கேட்டது. அப்படியானால், மந்திரி சபை கேட்டதென்றேபொருள்? 'மந்திரி சபை கேட்டது' என்றால், காங்கிரஸ் சட்டசபை உறுப்பினர் கேட்டனர்' என்பது பொருள்; சட்டசபை கேட்டதென்றால் 'தமிழ் நாட்டு ஓட்டர்கள் கேட்டனர்' என்று பொருள்; 'ஓட்டர்கள்' என்றால், அறிவு படைத்த மக்கள் 'கேட்டனர்' என்று பொருள்.

"இப்படி எல்லோரும் கேட்ட பின்னும், அந்தப் பகுதிகள் தமிழகத்திற்கு இல்லை என்றால், ஒன்று—ஆளுக்கு ஒரு முழக் கயிறு எடுத்துக்கொண்டு, மரத்திலே தொங்கவேண்டும்; அல்லது, 'நிறைவேற்றிய தீர்மானத்தை அமுல் செய்யமுடியாத மந்திரி சபை இனி ஒரு கணமும் இருக்கக்கூடாது' என்று உத்தரவு பிறப்பிக்கப்படவேண்டும்.

"சென்னை சட்டசபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் டில்லிக்கு அனுப்பப்பட்டது தீர்மானம் தவறு என்றால், பண்டித நேரு 'டிரங்போன்' மூலம் பேசியிருக்கலாம்—'உம்மை முதன மந்திரியாயிருக்கச் சொன்னேனா? மூர்க்கீக் கோட்டைபோல தீர்மானம் நிறைவேற்றக் கூறினேனா?' என்று கூறியிருக்கலாம்; கூறவில்லை கூறியிருந்தால், தேவிகுளம், பீர்மேடு தமிழர்களுக்கு இல்லாது போனாலும் காமராசரின் தன்மானம் மட்டுமேனும் தங்கியிருக்கும்.

"காமராசர், 'தேவிகுளம்—பீர்மேடு தமிழருக்குக் கிடையாது' என்று கூறியிருக்கலாம்.

"ஆந்திர மாகாணம் பிரிந்தபோது—தமிழ் வட்டங்கள் சில அந்தப் பகுதியில் சேர்க்கப்படுவதாக அறிந்த தமிழரசுக் கழகத்தவர் பெரும் கிளர்ச்சிகளில் ஈடுபட்டனர்; அப்போது பதவியிலிருந்த ஆச்சாரியார், 'சென்னை தமிழருக்குத்தான்—ஆந்திரருக்கு அல்ல; சென்னையை ஆந்திரருக்குத் தராமல் பாதுகாத்துக் கொள்வதுபற்றி நான் உறுதிமொழி தரமுடியும்; ஆனால், திருத்தணியும், திருப்பதியும் தமிழருக்குக் கிடைக்கும் என்பது பற்றி நான் உறுதிகூற முடியாது' என்று, புலி கண் முன்னால் பாய்ந்து வருவதுபோலத் தெளிவாகச் சொன்னார். ஆனால், காமராசர்—'தேவிகுளம், பீர்மேடு நமக்குத்தான்; அதில் சந்தேகமில்லை,' என்று கூறிக்கொண்டிருந்துவிட்டு, இப்போது மழுப்புகிறார். இவரது போக்கு மண்ணுளிப் பாம்பு கண்ணுக்குத் தெரியாமல் வந்து கடித்துவிட்டுப்போவதைப் போல் இருக்கிறது

"காமராசர், தானே நேருவிடத்தில், 'தேவிகுளம், பீர்மேடு தமிழகத்துடன் இணைக்கப்படாவிட்டால் நாங்கள் அங்கு தலைகாட்ட முடியாது; காங்கிரஸ் செல்வாக்கு சீரழிந்துபோகும்; வரும் பொதுத் தேர்தலில் இதர கட்சியினர்தான் ஆட்சிக்கு வருவார்கள்; எனவே அவற்றைத் தமிழகத்துடன் இணைத்துவிடுங்கள்,' என்று கூறியிருந்தால் கிடைத்திருக்கலாம்; ஆனால், இவர் நேருவிடம் சொன்னது என்ன?

"தேவிகுளம்—பீர்மேடு தேவையா? என்று நேரு கேட்டபோது, 'தேவை என்றுதான் அவர்கள் சொல்லுகிறார்கள்,' என்று கூறியுள்ளார்; 'நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?' என்று கேட்டபோது, 'நீங்கள் என்ன சொல்கிறீர்களோ அதன்படி நடக்கிறேன்,' என்று கூறியிருக்கிறார் காமராசர்.

சட்டசபைத் தீர்மானத்திற்கு மதிப்பளிக்க வேண்டும் என்று நினைத்திருந்தால் காமராசர், நேருவிடம் நிலையை விளக்கி வற்புறுத்தியிருக்கலாம்.

காமராசர், சட்டசபையில் வாக்குறுதி தந்தார்; இன்று அந்த வாக்குறுதி என்னவாற்று? இது குறித்து காங்கிரசாருக்கு வெட்கம் ஏற்படவேண்டாமா? மனதில் புழுக்கம் ஏற்படவில்லையா?

'நாங்கள் ஏதேனும் வாக்குறுதியளித்திருந்து, அதனை நிறைவேற்றாது விடுத்திருந்தால், காங்கிரசார், எங்களை மனித இனத்திலேயே சேர்க்கமாட்டார்களே!

இராணிப்பேட்டையில் அண்ணா

13—2—56-ல், இராணிப்பேட்டைக்கு வருகை தரும் அண்ணா அவர்களுக்கு நகர பஞ்சாயத்து சபை வரவேற்பு ஒன்று வாசித்தளிக்க முடிவு செய்திருக்கிறது. (ந. நி.)

கர்நாடக-கேரள இணைப்பு முயற்சியாம்!

ஆந்திர-கர்நாடகக் கூட்டுக்கு ஆசையாம்!

ஆந்திரர் சீறுவர் என்பதில் அச்சமாம்!

திரைமறைவில் பண்டித நேருவின் அரசியல் கூத்து

ஷாயித் நகர், பிப். 12—

மொழிவழி ஏற்பாடு குழப்பத்தில் முடிந்தது. நேருவின் ஏதேச்சாதிகாரத் தீர்ப்பு கொந்தளிப்பை உண்டாக்கி இருக்கிறது.

மக்கள் தீர்ப்பை மதிக்காது ஏதேச்சாதிகாரமாகத் தீர்ப்பளிக்க நேருவின் தீர்ப்பை மதிக்க மக்கள் மறந்து விட்டார்கள்.

அதனால் ஏற்பட்ட அதிர்ச்சியை மறைக்க தட்சிணப் பிரதேசம் என்ற மும்மொழி மாகாணக் கரடியைக் கிளப்பினர், இந்தியப் பிரதமர்.

தட்சணப் பிரதேசத்தில் ஒரு உறுப்பாக இருக்கவேண்டிய கர்நாடகம் அவ்வேற்பாட்டிற்கு இணங்க மறுத்துவிட்டது!

மீண்டும் தோல்வி! — மேலும் அதிர்ச்சி!

தட்சிணப் பிரதேசம் இல்லையானாலும், கேரளத்தையும்—சென்னையையும் இணைத்து ஒரு இருமொழி அமைப்பை உருவாக்க வேண்டும் என முயற்சிக்க முனைந்தார், இந்தியப் பிரதமர்!

காயா—கனியா—முடிவு தெரியவில்லை! மூடுமந்திரமாக இருக்கிறது!

அதற்குள்ளாக மற்றொரு ஏற்பாட்டிற்கு முயற்சி செய்யப்படுவதாகத் தகவல் தரப்பட்டிருக்கிறது.

கேரள — கர்நாடகக் கூட்டுக்கு நினைப்பாம; ஷாயித் நகரில அதற்காகத் திரை மறைவில் தீவிரமாக முயற்சிக்கப்படுகிறதாம்.

இந்த நினைப்புக்கும் ஒரு முட்டுக்கட்டை இருக்கிறதாம்; தெலுங்கானா மக்கள் விசால ஆந்திரத்துடன் சேர மறுத்துத் தனி அமைப்புக் கோரி வருகிறார்கள். கர்நாடகத்தையும் ஆந்திரத்தையும் ஒன்றாக இருமொழி அமைப்பாக இணைப்பதனால், தனி அமைப்புக் கோருவதைத் தெலுங்கானா மக்கள் விட்டு விடுவதாகக் கூறுகிறார்களாம்!

இவ்விணைப்புக்கு முயற்சி எடுப்போமா என்று இந்தியப் பிரதமர் மிக மிகத் தீவிரமாக முயற்சிக்கக் கூடும்—தெளிவற்ற நிலையில் அவர் எதற்குத்தான் முயலமாட்டார்? மூக்கறுந்து சிறிவிழமாட்டார்!

எதற்கு முயற்சி—கலந்தாலோசிப்பது — கூடிப்பேசுஅது—ஒரு 'பத்வா' அவரே போட்டுவிடலாமே! அவர்தான் இந்தியப் பிரதமர் ஆயிற்றே?

அந்த வருமானம் யாருக்குக் கிடைக்கிறது?

முந்திரிபருப்புப் பொருள்களின் ஏற்றுமதி மூலம் இந்தியாவுக்கு ஆண்டுதோறும் சுமார் ரூ 12,80,00,000 வருமானம் கிடைக்கிறது. முந்திரிப் பொருள்களும் தேயிலையைப்போல அதிகமான டாலர் வருமானம் சம்பாதித்துக் கொடுக்கும் இனமாகும்.

1951 மார்ச்சிலிருந்து 1956 ஜனவரி வரையுள்ள காலத்தில், இந்தியாவுக்குக் கிடைத்துள்ள வெளிநாட்டு உதவியின் மொத்த மதிப்பு ரூ 306 7 கோடி; இந்தத் தொகையில், ரூ 144 6 கோடி முதலாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் முதல் நான்கு ஆண்டுகளில செலவு செய்யப்பட்டிருக்கிறது. மேலும் ரூ 50 கோடி நடப்பு ஆண்டில் செலவிடப்படும்; பாக்கித் தொகை இரண்டாவது திட்டக் காலத்தில் செலவிடப்படும

ஆசிய ஜோதி அளித்திடும் நீதி!

★

தேவிகுளம்-பீர்மேடு தமிழகத்துடன் இணைவதற்காக அமைந்த சர்வகட்சி கூட்டணி பற்றி

அறிஞர் அண்ணா

நெடுஞ்செழியன்

ஈ. வெ. கி. சம்பத்

ஆகியோர் ஆற்றிய பேருரைகள், அவர்களின் ஒப்புதலுடன் புத்தகவடிவில் விரைவில் வெளிவருகிறது

விலை அணா எட்டு

★

விற்பனை உரிமை!

பாரி நிலையம் — பிராட்வே — சென்னை

* *

தேவிகுளம்-பீர்மேடு பற்றி தி. மு. க. விளக்கம்

14—2—56 செவ்வாய் மாலை 6 மணிக்கு

சென்னை - ஏழுகிணறு

பாரக்ஸ் விளையாட்டு மைதானம் (ஸ்டான்லி ஆஸ்பத்திரி அருகில்)

தலைவர்:

வி. முனுசாமி, எம். சி.

பேசுவோர்:

அண்ணா

கே. ஏ. மதியழகன்

—9-வது வட்ட தி. மு. கழகம்

* *

சர்வ கட்சிக் கூட்டணி பிரச்சார வெளியீடுகள்

★

பிப்ரவரி 20-ம் நாள் கடை அடைப்பு—பொது வேலைநிறுத்தம் பற்றிய விளக்க அறிக்கைகளும், சுவரொட்டிகளும் தேவைப்படுவோர் கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதிக் கேட்டுப் பெற்றுக்கொள்ள வேண்டுகிறோம்:—

சர்வ கட்சிக் கூட்டணி,
'ஜம்மி பில்டிங்ஸ்'
48/1 இராயப்பேட்டை ஐரோடு
இராயப்பேட்டை சென்னை—14

—தி மு. க. தலைமை நிலையம

தேவிகுளம்-பீர்மேடு: தி மு.க.விளக்கம்

திருச்செங்கோடு:

40 கால் மண்டபத்திற்கு முன்
15—2—56 மாலை 6 மணிக்கு
பேசுபவர்:
சி. பி. சிற்றரசு

★

கோத்தமங்கலம்:

அழகிரி அரங்கில்
15—2—56 மாலை 7 மணிக்கு
தலைவர்:
என். ஆறுமுகம்
பேசுவோர்:
இரா. சௌரிராசன்
கே. அடைக்கலம்
ஏ. பி. இராசன்
ஏ. டி. பதி
வி. ஏ. கணேசன்

★

மீஞ்சூர்

14-2-56 மாலை 5 மணிக்கு
தலைவர்:
இராதாமணாளன்
பேசுவோர்:
நாதம்-டி. இராமசாமி
காஞ்சி-கல்யாணசுந்தரம்

ஸ்ரீபெரும்புதூர் தாலுகாவில்:
சர்வ கட்சிப் பொதுக் கூட்டங்கள்

மாங்காடு:

14—2—56 மாலை 6 மணிக்கு
தலைவர்:
என். ஜி. கண்ணப்பா
பேசுவோர்:
ஆர். ஸ்ரீனிவாசமூர்த்தி
ஏ. வெங்கடாசலம்
வி. எஸ். கோவிந்தராசன்
எம். சின்னசாமி (ஈரோடு)
கே. டி. எஸ். மணி

கக்கன்ஜி—நேருஜி........

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டதும், தென்னாட்டு மக்கள் இந்தி கற்றுக்கொள்வது போன்றே வடநாட்டு மக்களும் கன்னடம், மலையாளம், தமிழ், அல்லது வேறு எந்த மொழிகளையாவது கற்றுக்கொள்ளவேண்டியது கட்டாயமாகும் என்று நேரு உபதேசித்துள்ளார்.

இந்த மேலிடத்து மொழி பேரத்தால், தென்னாட்டு மக்களுக்கு—அதிலும் குறிப்பாகத் தமிழ் மொழியினருக்கு ஏற்படக்கூடிய இலாபம் எதுவோ?

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24 சூரியநாராயண செட்டித் தெரு. இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.